# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 6,966 — 1918 ம் ஹு புரட்டாதிமீ 13 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV. — நான்காம் பாகம்.

### தேசாதிபதியவர்களால் பிரசித்தம்.

பெரிய பிரித்தானியாவும் அயர்லந்தும்சேர்ந்த ஐக்கிய இராச்சியத்திற்கும் கடல்களுக்கு அப்பாலிருக்கும் ஆதிபத்திய நாடுகளுக்கும் அரசரும் சமயபாலகருமாகிய ஐந்தாம் ஜோர்ஜ் வேந்தர் நாமத்தினுலே :

மகிமை தங்கிய சென்ற் மைக்கேல் அன்ட் சென்ற் ஜோர்ஜ் வரிசையின் கொம்பானியன் பட்டவர்த்தனரும் இலங்கைக்கும் அதைச்சார்ந்த ஆதிபத்தியங்களுக்கும் ஆட்சியதிகாரியுமாகிய உத்தமனுர் றெஜினல்ட் எட்வெட் ஸ்ற்றப்ஸ் அவர்களாலே

### விளம்பரம்.

ஆர். ஈ. ஸ்ற்றப்ஸ்.

இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரியாகிய நாம் அதிகார மந்திர சபையாரின் ஆலோசனையுடனும் 1916 ம் ஆண்டின் 4 ம் ஊர்திகளைப்பற்றிய கட்டளைச்சட்டத்தின் 18 ம் பிரிவின பிரகாரம் நம்மீது வைக்கப்பட்ட தத்துவத்தைக்கொண்டும் 1918 ம் வருஷம் ஆனிமாதம் 13 ம் திகதி பிரசுரப் படுத்தப்பட்டவையும் மேற்சொல்லப்பட்ட கட்டளைச்சட்டத்தின்படி அமைக்கப்பட்டவையுமாகிய கொழும்பு நகரசங்கத்தின் உப விதிகளின் 7 ம் அத்தியாயத்தின் 18 ம் 25 ம் நம்பர்களிலுள்ள "இன்ஸ்பெகறருக்குக் கீழ்ப்படாத பொலிஸ் உத்தியோகஸ்தர்" என்ற சொற்களுக்குப்பதிலாக "சப் இன்ஸ்பெக்றருக்குக் கீழ்ப்படாத பொலிஸ் உத்தியோகஸ்தர்" என்ற சொற்கள் வைக்கப்பட்டுத் திருத்தம் செய்திருக்கிறேமென்பதை நீவிர் அறிந்துகொள்வீராக.

இலங்கைத் தீவில் கொழும்பில் எங்கள் ஆண்டவரின் வருஷம் ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு புரட்டாதிமாதம் ஒன்பதாந் திகதி கொடுக்கப்பட்டது.

உத்தமனுரது கட்டளைப்படி,

வ. எஸ். பெக்டன்,
அக்றிங் கலோனியல் சக்கிறுத்தார்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் (a) நேபொடையிலிருக்கும் சந்தையை திருத்துகிறதற்கும் அங்கேயுள்ள ரேட்டு ஒன்றை வழி மாற்றுகிறதற்கும் (b) நேபொடையிலிருக்கும்பிரசித்த சந்தையை பெருப்பிக்கிற என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 16,800. குறிச்சி—நேபொடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கடை .. | கடை .. | ஏ. எல். எம். முகமடு இஸ்மேயில் .. | 0 0 3·52 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | மககனதெரியனகும்புறவும் புஞ்சிகனதெரியனகும்புறவும் .. | நெல்வயல்கள் .. | கண்டமுருகே அமெஞ்சியும் மற்றவர்களும் | 1 | 3 | 21·79 |
| 3 | கல்லோடின் தோட்டங்கள் .. | றப்பர் .. | ேரஷ்கோ றப்பர் தோட்டங்கள் கொம்பனி | 0 | 0 | 17·85 |
| 5 | கனதெரியான .. | ஓட்டால் வேய்ந்த மேல்வீடுள்ளகடை | ரி. எ. டோறேஅப்பா .. .. | 0 | 0 | 2·75 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு ஒகடோபர்மாசம் 14 ந் தேதியிலன்று பின்னேரம் 1 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாகவெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1918 ம் ஞு செப்டம்பர்மீ 3 ந் உ.

சி. வி. பிறேயின்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பலக்கடுவா ேறாட்டில் 4 ங் கட்டையில் ஓர் கற்குழிக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலககம் 6,869. குறிச்சி—ககல்ல. விவரம்—கொஞ்ச றப்பர் மரங்களும் ஒரு மாமரமும் உள்ளன.

| துண்டு. | காணியினது பெயர். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | கலுகல்லத்தோட்டம் அல்லது கட்டுகாஸ்தோட்டைத் தோட்டம் | கொழும்பு ஷெம்ஸ்வின்லே கொம்பனியார் | 0 | 1 | 5·62 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு ஒக்டோபர்மாதம் 10 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுகொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1918 ம் ஞு செப்டெம்பர்மீ 13 ந் உ.

ஜீ. எஸ். வோன்,
அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கந்தறைகடை பள்ளிக்கூடம் கட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 10,943. குறிச்சி—கந்தறை, வெல்லபடபத்து.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | நவறத்னவத்த அல்லது நாதுகளவத்த .. | தோட்டம் .. | என். ஏ. ஜே. கொடிபிலி .. | 0 | 1 | 0·19 |
| 2 | மணஉவிகேவெவ அல்லது கதிருலெப்பே கேவத்த .. .. | ஷை .. | ஏ. எச். நச்சோஹாமி .. | 0 | 1 | 9·51 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம்நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுககு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஞு ஒக்டோபர்மீ 7 ந் தேதியிலன்று பகல் 11 மணிககு மாத்தறைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1918 ம் ஞு சப்டம்பர்மீ 4 ந் உ.

றீ. ரீட்,
அரசாட்சி உப ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம்இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் காத்தான் குடியில் மருந்துச் சாலையும் வைத்தியர் குடியிருக்கிறதற்கு வீடு கட்டுவதற்கென்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,302. குறிச்சி—ஆரப்பத்தை 2 ம் குறிச்சி.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சங்கிரவன்காடுவளவு .. | தென்னைவளவு .. | காத்தான்குடி 4 ம் குறிச்சி உமறுலெவ்வைப் போடி மீரா முகய்தீன்.. .. | 0 | 1 | 35·3 |

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம், ஏ. றூ. ப |
|---|---|---|---|---|
| 2 | சந்திரவன்காடுவளவு .. | தென்னைவளவு .. | காத்தான்குடி 4 ம் குறிச்சி உமறுலெவ்வைப் போடி மீரா முகய்தீன் .. | 0 2 9·1 |
| 3 | வெம்புமேட்டுப்பூமி .. | வெட்டைப்பூமி .. | காத்தான்குடி 5 ம் குறிச்சி அகமதுலெவ்வை பக்கீர் முகய்தீன் லெவ்வை .. | 0 0 18 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக் கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1918 ம் ஸ்ரீ ஐப்பசிமாசம் 16 ந் தேதியிலன்று பிற்பகல் ஒன்றுமணிக்கு மட்டுக்களப்புக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருக்கோணமலை கச்சேரி,
1918 ம் ஸ்ரீ புரட்டாசிமீ 3 ந் வ.

ஆர். ஜி. பெஸ்றிங்,
கீ. மா. அரசாட்சி ஏசண்டு.

---

## உரிமைபெறும் பாழ்நிலத்தின முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

இத்துடன் அனைத்திருக்கும் டாப்பில் காட்டப்படுகின்றவும், மத்திய மாகாணத்து கண்டி டிஸ்திறிக்கில் யட்டிநுவரைப்பகுதியில் கண்டிப் பட்டண நகரசங்க எல்லைக்குள்ளிருக்கும் "அப்பர் லேக்" ரோட்டிலிருந்து ரோஸ்னீத் தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற ரோட்டுக்கணித்தாயும் "காசில்ஹில்" கொட்டகைக்குக்கிட்டவும் இருக்கின்றவும், அரசாட்சிக்குச் சேர்க்கப்பட்டிருப்பதுமான இரண்டு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்றுபேர்ச் விஸ்தாரமுள்ள துண்டுக்காணி சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாகத் தோற்றப்படுகிறபடியாலும், கவனமாகவும் நியாயமாகவும் விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரரைக் கண்டுபிடிக்கப்படாமையாலும், இதனால்சகலரும் அறியவேண்டியது என்னவென்றால் மத்திய மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் சாள்ஸ் ஸ்ருவாட் ஆகிய நான் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தின்பேரினாலும், அதியுத்தம தேசாதிபதியின் ஆக்ஞையின்படியும், 1919 ம் ஆண்டு செப்டம்பர்மாதம் 30 ந் தேதியிடி அல்லது அதற்கு முன்பாக அக்காணியின் சொந்தக்காரரினால் அல்லது உரித்தாளிகளினால் உரித்து ஸ்தாபிக்கப்படாவிட்டால், மேற்படி கட்டளைச்சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று விளம்பரப்படுத்துகிறேன்.

கண்டி, கச்சேரி,
1918 ம் ஸ்ரீ ஆகஸ்டுமீ 29 ந் திகதி.

சீ. எஸ் வோன்,
அரசாட்சி ஏசண்டு.

### குறிக்கப்பட்ட டாப்பு.

48,708 ம் இலக்க உரிமைப்படத்தில் விவரிக்கப்பட்ட 66 ம் இலக்கக் காணித்துண்டு. எல்லைகளாவன: வடக்கு-67 ம் இலக்கக் காணித்துண்டு (48,814 ம் இலக்க உரிமைப்படம்); கிழக்கே-42 ம் இலக்கக் காணித்துண்டு (47,404 ம் இலக்க உரிமைப்படம்), 41 ம் இலக்கக் காணித்துண்டும் (47,404 ம் இலக்க உரிமைப்படம்); தெற்கே-65 ம் இலக்கக் காணித்துண்டு (48,707 ம் இலக்க உரிமைப்படம்); மேற்கே-ரோஸ்னீத்தோட்டத்துக்கும் வேறு தோட்டங்களுக்கும் போகிற ரோட்டு.

விசாலம்: 2 ஏக்கர் 2 றூட் 13 பேர்ச்.

1845 ம் ஆண்டு அக்டோபர்மாதம் 22 ந் திகதியில் அரசாட்சியாரால் கௌரவ டீ. எவ். வோட்டெஸ்கு அவர்களுக்கு விற்கப்பட்டது.

---

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

புத்தளங்கரைத்தீவு உப்புமாலிலுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் வேலை யொப்பந்தத்திற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புபவர் தமது கேள்விப்பத்திரத்தை ஓர் முத்திரித்த உறையில் இட்டு அதன் இடதுமூலையில் "கரைத்தீவு உப்புமாலிலுள்ள உத்தியோகத்தரின் வீடுகளைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக்கேள்வி" யென்றெழுதிப் புத்தளம் உதவி யேசண்டவர்கட்கு இம்மாதம் 30 ந் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு முந்திக் கிடைக்கத்தக்கதாக வனுப்பவேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப்பத்திரத்தை யனுப்பமுந்தி யெந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றிச்சீட்டைக் கேள்விப்பத்திரத்தோடனைக்கவேண்டும்.

4. கேள்விக்காறன் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில் தான் வேலையைக் கிரமமாக முடித்துப்போடுவதாய் தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டபின நியாயமான காலத்துள் உதவி யேசண்டருடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ளவேண்டும். அப்படி யுடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காகிதங்கள் கிடைக்கத்தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்கவேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதின்பின் 4 கிழமைக்குள் வேலையை முடித்துப்போடவேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தளம் உப்புத்துரை யவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

குறித்த வீடுகளிற் தற்போது உளுத்தும் பழுதாயும் போயிருக்கும் மரந்தடி முதலியவற்றை யெடுத்துப்போட்டுவேறு புதிய மரந்தடி முதலியவற்றைப் போடவேண்டும்.

வீடுகள் வெளிவீடுகள் எல்லாவற்றையும் புதுக்கிடுகினால் வேய்ந்து கூரைகள்மேற் பாரமாகப் பூட்டுகளை வைக்கவேண்டும்.

வீடுகளின் உள் நிலத்திற்கு வேண்டிய இடங்களில் மண் போட்டுயர்த்தி இறுக்கி மட்டமாக்கி சாணத்தால் மொழுக வேண்டும்.

சிவர்கள் சேத்தைகள் எல்லாவற்றையும் வேண்டிய விடங்களில் பழுதுபார்க்கவேண்டும். சிவர்களுக்கு வெள்ளையடிக்க வேண்டும். இரண்டாவதுடைய வீட்டுச் சிவரில் இருக்குங் கறையான் பாளியை யெடுத்துப்போட்டு சிவரைப் பழுதுபார்த்து வெள்ளையடிக்கவேண்டும்.

உப்புத்துரையுடையவும், முதற்பேருடையவும் இரண்டாவதுடையவும் வீடுகளில் கதவு யன்னல்களுக்குப் பழுதுபார்த்து மைபூச வேண்டும்.

மிக்கேல், சூசை, தயுடின், மூண்டு, சிறில் ஆகிய இக்காவற்காறரின் கொட்டில்களில் உள்ள கதவுயன்னல்களைப் பழுதுபார்க்கவேண்டும்.

வேலிகள் குறுக்குவேலிகள் எல்லாவற்றிற்கும் வேண்டிய விடங்களில் புதுக கதியால்கள் நட்டு வேலிகளைப் பழுதுபார்த்துத் திரும்பி யடைக்கவேண்டும்.

உப்புத்துரையுடைய வீட்டிலுள்ள சமையலறையையும் மலசலங்கழிக்குமிடத்தையும் நன்றாய்ப் பழுதுபார்க்கவேண்டும்.

முதலாவது, இரண்டாவது கங்காணியாகிய விவர்களின் வீட்டின் படுக்கையறைக் கதவுகளுக்கும், கங்காணியுடைய வீட்டிற் குசினிக் கதவிற்கும் பூட்டுகளுந் துறப்புகளும் போடவேண்டும்.

முதற்பேருடைய வீட்டிற் குசினியின் தென்மூலைச்சிவரை யிடித்துத் திரும்பிக் கட்டவேண்டும். அத்துடன் விறுந்தையைச்சுத்தி யோர் குறுக்குவேலி யடைக்கவேண்டும்.

காவற்காரன் மார்சலுடைய வீட்டைப் பிடுங்கி திரும்பிக கட்டவேண்டும்.

டபிள்யு. ஈ. உவெயிற்,
உதவி யேசண்டர்.

புத்தளங் கச்சேரி,
1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 9 ந் வ.

---

புத்தளந் தென்உப்புமாலிலுள்ள 33 ம் 35 ம் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்கும் வேலை யொப்பந்ததிற் கொடுக்கப்படும்.

2. இவ்வொப்பந்தத்தைக் கேட்க விரும்புவோர் தங்கள் கேள்விப்பத்திரங்களை முத்திரித்த உறைகளிலிட்டு அவ்வுறையின் இடது மூலையில் "புத்தளந் தென் உப்புமாலிலுள்ள 33 ம் 35 ம் உப்புக்குதங்களைப் பழுதுபார்க்கும் ஒப்பந்தக் கேள்வி" யென்டெழுதி புத்தள முதவி யேசண் டவர்கட்கு புரட்டாதி மாதம் 30 ந் தேதி பிறபகல் ஒரு மணிக்கு முந்தி கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

3. கேள்விக்காறன் தனது கேள்விப் பத்திரத்தை யனுப்ப முந்தி எந்தக் கச்சேரியிலாவது ஒரு கச்சேரியில் முற்பணமாகப் பத்து ரூபாய் கட்டிப் பெற்றுககொண்ட பற்றுச் சீட்டைக் கேள்விப்பத்திரத்தோ டணைக்கவேண்டும்.

4. தனது கேள்வி யேற்றுக்கொள்ளப்படுங் காலத்தில், கேளவிக்காறன் தாம் வேலையைக் கிரமமாக முடித்துப் போடுவதாய் தன் கேள்வி யேற்றுக்கொள்ளப்பட்டபின் ஞாயமான காலத்துள் உதவி யேசண் டவர்களுடன் ஓர் உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வேண்டும். அப்படி உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறில் கட்டிய முற்பணம் பறிமுதலாக்கப்படும்.

5. கேள்விக்காறன் தனக்குக் காயிதங்கள் கிடைக்கத் தக்கதாகப் புத்தளத்தில் ஓர் விலாசத்தைக் குறிக்க வேண்டும்.

6. உடன்படிக்கை பண்ணிக்கொண்டதன்பின் நாலு கிழமைக்குள் வேலையைக் கிரமமாக முடித்துப்போட வேண்டும்.

7. இன்னும் வேண்டிய விபரங்களைப் புத்தள முப்புத்துரையவர்களிட மிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

செய்யவேண்டிய வேலையின் விபரம்.

மேற்கூறிய உப்புக்குதங்களின் கூரையைப் பழுதுபார்த்து புதுக்கிடுகினால் திருப்பி வேயவேண்டும்.

டபிழ்யு. ஈ. உவெயிற்,
உதவி யேசண்டர்.

புத்தளங் கச்சேரி,
1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 6 ந் வ.

---

## கடன்கொடுக்க இயலாமை விளம்பரம.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்.

கடன்கொடுக்க இயலாமையைக்காட்டும் வழக்கு.

இல. 78. வண்ணார்பண்ணை மேற்கு முகம்மது மெய்தீன் அப்துல் காதரின் கடன்கொடுக்க இயலாத விஷயத்தில்.

வண்ணார்பண்ணை மேற்கு முகம்மது மெய்தீன் அப்துல் காதர், 1853 ம் ஆண்டின் 7 ம் இலக்க சட்டப் பிரகாரம், தான் கடன்கொடுக்க இயலாதவரென ஓர் சத்தியக் கடுதாசியும் தனது ஆதனத்தை மதித்துப் பிடிப்பதற்கு ஒரு பெட்டிசமும் அணைத்திருப்பதனால், அவரின் மதித்துப் பிடிக்கக்கூடிய ஆதனத்தில் அறவிடக்கூடியவரையில் ரூ. 10 க்கு ரூ. 2·50 சதவீதம் கொடுக்கக்கூடுமென்று தெரிகிறபடியால் கடன்கொடுக்கப்படவேண்டியவர்கள் இத்தால் அறிவது, சொல்லப்பட்ட கோடு சொல்லப்பட்டவரை கடன்கொடுக்க இயலாதவரென தீர்ப்பிட்டதென்றும், சொல்லப்பட்ட கட்டளைப்பிரகாரம் இன்னும் செய்யவேண்டியவைகளைச் செய்யும்பொருட்டு 1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 18 ந் திகதியும் 1918 ம் ஆண்டு ஐப்பசிமீ 2 ந் திகதியும் ஆகிய இவ்விரு தினங்களிலும் கோடு பிரசித்தமாகக் கூடப்படும்.

கோட்டுக் கட்டளைப்படி, ஏச். ஆர். பிறீமன்,
சக்கிடுத்தார்.

1918 ம் ஆண்டு புரட்டாதிமீ 4 ந் வ.

---

## தொழிலுக்குங்படாதவரின் அறிவித்தல்.

கொழும்பு கொள்ளுப்பிற்றி இல. எஅ ம் இடத்திலிருக்கும் தாந்துலேகே பீறர் மார்செல் பிறனெண்டு வாகிய நான் 1907 ம் ஆண்டு 1 ம் கட்டளைச்சட்டத்தின் 1B செடியிலில் உ ம் பிரிவின்படி இன்று தவர்க்கம்மூன்று மாசத்துக்குப்பின், கனம் றெஜிஸ்திரர் ஜெனரல் அவர்களிடம். புத்தளம் டிஸ்திறிக்குச் சிங்களம் நொத்தாரிஸ் வேலை செய்வதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டிருப்பதை இதனால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

கொள்ளுப்பிற்றி, இல. எஅ,
1918 ஆவணி உகூ, வ.

தீ. பீறர் எம். பிறனெண்டு.

H. C. COTTLE, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.